# திருஅருட்பிரகாச வள்ளலார்

சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/– ஆண்டு சந்தா ரூ.110/–

அருள்: 11 குரோதி ஆண்டு/ மாசி – பங்குனி / மார்ச்–2025 ஜோதி: 03

மாதப் பூசத்திருநாள்: 10.03.2024 அடுத்த மாதம் பூசம்: 06.04.2025

தெய்வத்திரு.
**சதீஷ்ராஜ் அடிகளார்,**
நிறுவனர்

தயவுத்திருமதி.
**தனலட்சுமி அம்மையார்,**
ஆசிரியர், வெளியிடுபவர்
மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:
**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**
புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,
முதன்மைச்சாலை, சென்னை– 600011.
தொடர்புக்கு 044–25570770 9003034056

## பொருளடக்கம்

| தலைப்பு | பக்கம் |
|---|---|
| திருக்குறள் சன்மார்க்க உரை | 4 |
| நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம் | 5 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 6 |
| மகாத்மா காந்தியின் சுயசரிதை | 8 |
| 154 ஆவது தைப்பூச பெருவிழா இல்லங்களின் அன்னதானம் | 11 |
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 12 |
| ஜீவகாருண்ய ஒழுக்கம் | 17 |
| ஆத்ம தரிசனம் | 20 |
| வள்ளல் பெருமானாரின் 154 வது தைப்பூச வருவிழா அன்னதான பட்டியல் 2025 | 24 |
| வள்ளலாரின் புத்தகம் | 29 |
| ஒழிவில் ஒடுக்கம் | 32 |
| நீங்களும் அன்னதர்மம் செய்யலாம் | 34 |




# உழவு

## (உயிர்ப் பண்புடன் வாழ்தல்)

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை. 1031**

*யோகம், ஞானம், தவம், பூசை ஆகிய செயல் பாடுகள் யாவும் ஆன்மப் பண்புடன் அதாவது ஆன்மநேயம் கொண்டு உழுது வாழ்தலையே முதன்மையாகக் கொள்ள வேண்டும்.*

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து. 1032**

*உயிர்நேய உழுதொழில் உடையவர்களே உலக இயக்கமாம் மனிதநேய வாழ்வுக்கு அச்சு போன்றவர்கள். அவர்களால் மட்டும்தான் வன்நெஞ்ச வாழ்வுடையாரைத் திருத்தி வாழ்விக்க முடியும்.*

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர். 1033**

*36 தத்துவங்களைப் பக்குவப்படுத்தி உழுது வாழும் உயிர்நேய வாழ்வினை உடையவரே வாழ்பவர்கள் எனப்படுவர். பிற வாழ்வுடையவர் யாவராயினும் ஆன்மநேயர்களை வணங்கிப் பின்பற்றுபவர்களாவர்.*

**பல்குடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
**அலகுடை நீழ லவர். 1034**

*ஐம்புல அடக்கம் மனவடக்கம் அட்டமாசித்தி ஆகிய ஆற்றல் பெற்றவர்கள்கூட ஆன்மநேயப் பயிர் விளைவிப்பவர்பால் அடிபணிந்து வாழவேண்டி வரும்.*

**இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது**
**கைசெய்தூண் மாலை யவர். 1035**

*உள்ளொன்று வைத்துப் புறமொன்று வாழாத வெளிப்படையான உயிர்நேய உழைப்பாளிகள் எங்கு சென்றும் தன் வாழ்வுக்குரியதைப் பயில விரும்பார். அவருக்கே அருளறிவு விளங்கி நிற்கும்.*

**உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேம்என் பார்க்கும் நிலை. 1036**

*அகம் புறம் ஆகிய யோக ஞானப்பற்று தல் உடையவர்களுக்கும் உயிர் நேய உழவு ஆதரவு இல்லாவிட்டால் அதோகதிதான்.*

**தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும். 1037**

*ஈ எறும்பு பறவை மிருகம் ஆண் மக்கள் பெண் மக்கள் ஆகிய அனைத்து உயிரிடத்தும் உழவென்னும் மாறாத நேசம் வைப்பவர்க்குப் பூசை முதலிய வழிபாடுகளால் ஆகப்போவது யாதுமில்லை.*

**ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு. 1038**

*மனிதாபிமானத்தினும் நல்லது மனித நேயம். அதனிலும் நல்லது உயிர் இரக்கம். அவ்விரக்கமுடையவர் உழவாகிய உயிர்ப்பண்பெனும் விளைச்சலை அமோகமாக அடைவர்*

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும். 1039**

*கையிருப்பிருந்தும், எடுபிடிகளிருந்தும், இரக்கத்தால் ஏற்றம்பெறும் வாய்ப்பிருந்தும் அதனை அடைய முடியாதவர்களைப் பார்த்து மன்னுயிர் மாண்பினளாம் மாதேவி மன எரிச்சல் கொள்வாள்.*

**இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலமென்னும் நல்லாள் நகும். 1040**

*பணமில்லை, பண்பில்லை, பரிவில்லை, பாசமில்லை, பரிபக்குவமில்லை என்று ஏய்ப்பவர்களை ஏறெடுத்தும் மன்னுயிர் மாதேவி பார்க்கமாட்டாள்.*

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !!!

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை




எண் : 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை-600011

தொலைபேசி: 9003034056, 9600024878

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com


## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்!!!

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கீகாரம் பெற்ற (பதிவெண் 24/239-2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மிகக்கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



### அன்ன தர்மம் விவரம்:

| | |
|---|---|
| காலை உணவு | ரூ.2000/- |
| மதிய உணவு | ரூ.5000/- |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட) | ரூ.8000/- |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

பதிவெண்: __________

முகவரி:

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**உருவதில் அருவும் அருவதில் உருவும்**
**அருள்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 666**

*உருவப் பொருள்களில் உருவமற்ற தன்மையும், உருவற்றவைகளில் பரு உரு வமும் அமைய அருளுடன் அமைத்தருள் வது அருட்பெருஞ்ஜோதி. (அருவமாகிய நீராவியும், எண்ணெய் வகையும் உருவ மாகிய இயந்திரங்களை இயக்கும் தன்மை யன)*

*(வேறு)*

*உருவமாகிய உடலில் இறைவன் அரு வமாக உள்ளான். அருவமாகிய உட்கர ணங்களில் ஒளி உருவமாக பக்குவர்களுக் குத் தோன்றுவான், இவ்வாறு விளங்கி அருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**வண்ணமும் வடிவும் மயங்கிய வகைபல**
**அண்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 668**

*நிறமும் வடிவமும் (உருவம்). வேறறக் கலந்திருக்கும் பல்வேறு வகையான பொருள் வகைகளைப் பொருந்த அமைத் தருள்வது அருட்பெருஞ்ஜோதி,*

*(வேறு)*

*பலவேறு வண்ணங்களிலும், பலவேறு வடிவங்களிலும் இறைவனைக் காட்டிய தால்; உண்மையறியாது மயங்கிய வகை பலவாய் உள்ளன. ஆயினும் அவை யாவும் இறைவனை நெருங்கி அடைவ தற்கென்றே என வகுத்தது அருட்பெருஞ் ஜோதி,*

**சிறுமையில் சிறுமையும் சிறுமையில் பெருமையும்**
**அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி 670**

*சிறியனவற்றுள் (அணுக்கள்) சிறிய னவும், சிறியனவற்றுள் பெரியனவும் (பேரணு) அமைந்திருப்பதை அறிவுடை யோர் உணர்ந்து அறியுமாறு பொருந்தப் படைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**பெருமையில் பெருமையும் பெருமையில் சிறுமையும்**
**அருள்நிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி 672**

*பெருமையுடைய பெரியவற்றுள் எங்கும் பரந்திருக்கும் பெரியனவும், பெரியவற் றுள் சிறுமையுடைய மிகச் சிறியனவும் (அணு), காணுமாறு அருளால் அமைத்த ருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**திண்மையில் திண்மையும் திண்மையில் நேர்மையும்**
**அண்மையில் வகுத்த அருட்பெருஞ் ஜோதி 674**

*உறுதிப் பொருள்களுள் மிகவும் வலிமை யும், அவற்றின் தன்மை மாறாமையும் பொருந்தியிருக்கும்படி அமைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**மென்மையில் மென்மையும் மென்மையில் வன்மையும்**
**அன்மைஅற்று அமைத்த அருட்பெருஞ் ஜோதி. 676**

*மிருதுத் தன்மையுள்ள பொருள்களுள் மென்மையும். அம்மென்மைத் தன்மை கொண்ட பொருள்களில் கடினத் தன்மை*

யும், வேறாகாது (பொருந்துமாறு) அமைத் தருள்வது அருட்பெருஞ்ஜோதி.

**அடியின்உள் அடியும் அடிஇடை அடியும்**
**அடிஉற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 678**


எல்லா உலகு, உயிர்கள், மற்றுமுள்ள பொருள்கள் யாவற்றுக்கும் அடிப் படையான முதல் காரணமாக உள்ள இறைவனை, அவனடிக்கீழ் அடிமையாக விளங்கும் ஆன்மா அவனையே ஆதாரமா கக் கொண்டு அவன் திருவடியைப்பற்றி ஒன்றிணைந்து, பிறவாப் பெருநிலையை அடைய வழி வகை அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.

**நடுவின்உள் நடுவும் நடுவதில் நடுவும்**
**அடர்வுற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 680**

எப்பொருள் எவ்வுயிர் அண்டங்கள் எங்கும் நடுநிலை உண்டு. இந்த நடுநிலைக் குள் நடுவாக பரம்பொருள் அமைந்துள் ளது. அது ஒன்றேயாக எங்கும் எதிலும் தானே பூரணமாக இருந்து விளங்கியும், யாவற்றையும் விளங்கச் செய்து கொண்டும் உள்ளது. அணு முதல் அண்டம் வரை உள்ள யாவற்றுக்கும் அதனதன் நடு நிலைக்கும் சூழ்நிலைக்கும் தீங்கு(மோதல்) ஏற்படாது பொருந்தப் படைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.


**முடியின்உள் முடியும் முடியினின் முடியும்**
**அடர்தர அமைத்த அருட்பெருஞ் ஜோதி 682**

உலகில் உள்ள அடி, நடு, முடியுடன் விளங்கும் எப்பொருளும் தோன்றி மறை வனவே, கடவுளான்மா அழியாத முடி வாயுள்ளது. மனித ஆன்மா முடியினுள் முடிவாம். மனித ஆன்மாவாக விளங் கும் நித்திய வடிவமான இவன், முடியாக விளங்கும் இறைவனுடன் ஒன்றிணைந்து பொருந்தி அழியா வாழ்வில் விளங்குவதே இயற்கை முடியா முடிவாகும். ஆன்மா வின் முடிவிலா வாழ்வுநிலை இனிதமைய வகுத்தருளுவது அருட்பெருஞ்ஜோதி.



# இறைவனை எங்கே காணலாம் ?

இறைவனைத் தேடி எங்கும் போக வேண்டியதில்லை. மிகக் கடினமாக தவம் போன்றவற்றை செய்தால் மட்டுமே இறைத் தன்மையை உணர முடியும் என்று இல்லை. அது நம் உள்ளும், புறமும் அணுக்களாக நிரம்பி அன்னையைப் போல் நம்மைப் பாதுகாத்து வருகிறது. அதன் கருப்பையில் தான் நாம் இருக்கின் றோம். நம்மைச் சுற்றி ஜடப்பொ ருட்களாக இருந்து நமக்கு அருள் பாளிக்கிறது. நமக்கு எதிராக ஒரு மனிதர் இருந்து துன்பம் தருவது போல் நாடகம் நடத்திக் கொண்டு தான் உள்ளது. தகுந்த நேரத்தில் தேவையான நபரை அனுப்பி உத வுவதும் அதுதான். அதுவேதான் தெருவோரங்களில் ஜீவராசிகளாக பசியிலும், வெயிலிலும், குளிரிலும் புறத்தே இருந்து கடினப்பட்டுக் கொண்டிருக்கிறது.



சென்ற மாதத் தொடர்ச்சி...

# மகாத்மா காந்தியின் சுயசரிதை...

## 34. ஆன்மப் பயிற்சி

சிறுவர்களின் உடல், அறிவுப் பயிற்சியைவிட அவர்களுடைய ஆன்மிகப் பயிற்சியே இன்னும் அதிகக் கஷ்டமானதாக இருந்தது. ஆன்மப் பயிற்சிக்கு நான் சமய நூல்களை அவ்வளவாக நம்பியிருக்கவில்லை. என்றாலும், ஒவ்வொரு மாணவனும் தன் சமயத்தைக் குறித்த மூலாதாரமான விஷயங்களை அறிந்திருப்பதோடு அச்சமய சம்பந்தமான நூல்களைப் பற்றியும் பொதுவாகத் தெரிந்திருப்பது அவசியம் என்று கருதினேன். ஆகவே, என்னால் இயன்றவரையில், அத்தகைய அறிவு அவர்களுக்கு இருக்கும்படி செய்து வந்தேன். ஆனால், அது அறிவுப் பயிற்சியின் ஒரு பகுதியே என்பது என் கருத்து. டால்ஸ்டாய் பண்ணையில் சிறுவர்களுக்குக் கல்வி போதிக்கும் பணியை நான் மேற் கொள்ளுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே, ஆன்மப் பயிற்சி அதனளவில் தனியானது என்பதை அறிந்திருந்தேன். ஆன்மாவை வளர்ப்பது என்பது ஒழுக்கத்தை வளர்த்து, கடவுளைப் பற்றிய ஞானத்தை அடைவதற்கு ஒருவரைப் பாடுபடும்படி செய்வதோடு தன்னைத் தானே அறியச் செய்வதுமாகும். இளைஞருக்கு அளிக்க வேண்டிய பயிற்சியில் இது முக்கியமானதோர் பகுதி என்று கருதினேன். ஆன்ம வளர்ச்சியோடு தொடர்பில்லாத எல்லாப் பயிற்சியும் பயனற்றது என்றும், அது தீமையாகவும் ஆகக் கூடும் என்றும் எண்ணினேன்.

வாழ்க்கையில் நான்காவது நிலையான சன்னியாச ஆசிரமத்தை அடைந்த பிறகே ஆன்ம ஞானத்தை அடைய முடியும் என்ற மூட நம்பிக்கை இருந்து வருகிறது என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால், மதிப்பதற்கரியதான இந்த அனுபவத்திற்கு வேண்டிய முயற்சியை வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தை அடையும் வரையில் தள்ளி வைத்துக் கொண்டு போனால் பிறகு அடைவது கிழப் பருவத்தையே யன்றி ஆன்ம ஞானத்தை அன்று. பரிதாபகரமான இரண்டாவது குழந்தைப் பருவத்திற்குச் சமமான அந்த முதுமைப் பருவம், பூமிக்குப் பாரமாக வாழ்வதேயாகும். நான் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்தபோதே, 1911–1912ஆம் ஆண்டிலேயே இக்கருத்தைக் கொண்டிருந்தேன் என்பது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. ஆனால், என்னுடைய இக்கருத்துக்களை இதே முறையில் நான் அப்பொழுது எடுத்துச் சொல்லாமல் இருந்திருக்கக் கூடும்.

அப்படியானால், ஆன்மப் பயிற்சியை அளிப்பது எப்படி?குழந்தைகள், தோத்திரப் பாடல்களை மனப்பாடம் செய்து பாடும் படி செய்தேன் நல்லொழுக்கத்தைப் போதிக்கும் நூல்களிலிருந்து

அவர்களுக்குப் படித்துச் சொன்னேன். ஆனால் இவையெல்லாம் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. குழந்தைகளுடன் நான் நெருங்கிப் பழக ஆரம்பிக்கவே, நூல்களின் மூலம் அவர்களுக்கு ஆன்மப் பயிற்சியை அளித்துவிட முடியாது என் பதைக் கண்டேன். எவ்விதம் தேகாப்பி யாசங்களின் மூலமே உடற்பயிற்சியும், அறிவு அப்பியாசங்களினாலேயே அறிவுப் பயிற்சியும் அளிக்க முடியுமோ அவ்வாறே ஆன்ம சாதனங்களினாலேயே ஆன்மப் பயிற்சியை அளிக்க முடியும். ஆன்ம சாதனப் பயிற்சியோ, முழுக்க முழுக்க உபாத்தியாயரின் வாழ்க்கையையும் ஒழுக் கத்தையும் பொறுத்தது. ஓர் உபாத்தியார் குழந்தைகளின் நடுவில் இருக்கும் போதும் சரி, தனியாக இருக்கும் போதும் சரி, தம் முடைய குணத்திலும் செயலிலும் எப் பொழுதும் அதிகக் கவனத்துடன் இருக் கவேண்டும்.

ஓர் உபாத்தியாயர், மாணவர்களுக்குப் பல மைல்கள் தொலைவில் இருக்கும்போ தும் தமது வாழ்க்கை முறையைக் கொண்டு அம்மாணவர்களின் ஆன்மப் பயிற்சிக்கு உதவவோ, தீமை செய்யவோ முடியும். நான் பொய்யனாக இருந்து கொண்டு, உண்மை பேசும்படி மாணவர்களுக்குப் போதிப்பது என்பது வீண் வேலை. தாம் கோழையாக இருக்கும் ஓர் உபாத்தியாயர், தம்மிடம் படிக்கும் மாணவர்களை வீரர் களாக்கிவிடவே முடியாது. புலனடக்கம் என்பதே தெரியாத ஓர் ஆசிரியர், புலன டக்கத்தை மாணவர்களுக்குப் போதித்து விடவும் முடியாது. ஆகையால், என்னு டன் இருக்கும் பிள்ளைகளுக்கும் பெண் களுக்கும் நானே எப்பொழுதும் உதாரண பாடமாக இருக்கவேண்டும் என்பதைக் கண்டேன். இவ்விதம் அவர்கள் என் உபாத்தியாயர்களாயினர். அவர்களுக் காகவேனும் நான் நல்லவனாக இருந்து நேர்மையுடன் வாழ வேண்டும் என்பதை நான் கற்றுக்கொண்டேன். டால்ஸ்டாய் பண்ணையில் இருந்தபோது எனக்கு நானே அதிகமாக விதித்துக் கொண்ட கட்டுத்திட்டங்களும் புலனடக்கங்களும், பெரும்பாலும் என் பாதுகாப்பிலிருந்த குழந்தைகளுக்காகவே என்றும் சொல்ல லாம்.

அங்கே இருந்த பையன்களில் ஒருவன் முரடன்; அடங்காப்பிடாரி. அவன் பொய் சொல்லுவான்; யாருடனும் சண்டை போடுவான். ஒரு நாள் அவன் துஷ்டத்தனம் எல்லை மீறிப் போய்விட் டது. எனக்கு ஒரே கவலையாகிவிட் டது. சிறுவர்களை நான் தண்டித்ததே இல்லை. ஆனால், அச்சமயமோ எனக்கு அதிகக் கோபம் வந்துவிட்டது. அவ னுக்குப் புத்திமதி கூறித் திருத்தப் பார்த் தேன். அவனோ, பிடிவாதமாக இருந்த தோடு என்னையும் எதிர்த்து மிதமிஞ்சிப் போகப் பார்த்தான். கடைசியாகப் பக் கத்திலிருந்த ரூல் தடியை எடுத்து அவன் கையில் ஓர் அடி கொடுத்தேன். அவனை அடித்தபோதே என் உடம்பெல்லாம் நடுங்கியது. இதை அவனும் பார்த்திருக் கவே வேண்டும். அவர்கள் எல்லோருக் குமே இது புதிய அனுபவம். அப்பையன் கதறி அழுதான். தன்னை மன்னிக்குமா றும் வேண்டினான். அவன் அழுதது, பட்ட அடி அவனுக்கு வேதனையாக இருந்ததனால் அல்ல. அவன் பதினேழு வயதுள்ள திடகாத்திரமானவன். விரும் பியிருந்தால், என்னை அவன் திருப்பி அடித்திருக்கவும் கூடும். ஆனால், அடிக் கவேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட் டதைக் குறித்து நான் அடைந்த மனவே தனையை அவன் அறிந்துகொண்டான். இச் சம்பவத்திற்குப் பிறகு அவன் எனக் குப் பணியாமல் இருந்ததே கிடையாது. என்றாலும், பலாத்காரத்தை உபயோகித் ததற்காக நான் இன்றும் வருத்தப்படு கிறேன். அன்று அவனுக்கு முன்னால் என்னுள் இருக்கும் ஆன்ம உணர்ச்சிக்குப் பதிலாக மிருக உணர்ச்சியையே காட்டி விட்டேன் என்று அஞ்சுகிறேன்.

அடிப்பது போன்ற தண்டனையே கூடாது என்று நான் எப்பொழுதும்

எதிர்த்து வந்திருக்கிறேன். என் குமாரர்களில் ஒருவனை ஒரே தடவை மாத்திரம் நான் அடித்துவிட்டதாக எனக்கு ஞாபகம். ஆகையால், அன்று நான் ரூல் தடியை உபயோகித்தது சரியா, தவறா என்பதில் நான் இன்னும் ஒரு முடிவுக்கு வர முடியாதவனாகவே இருக்கிறேன். கோபத்தினாலும், தண்டிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினாலும் தூண்டப் பெற்று நான் அவ்விதம் செய்ததால் ஒருவேளை அது தவறானதாக இருக்கலாம். என் மன வேதனையை வெளிப்படுத்துவதாக மாத்திரமே அது இருக்குமாயின், அது நியாயமானதே என்று நான் கருதியிருப்பேன். ஆனால், இவ்விஷயத்தில் நோக்கம் கசப்பானதாகவே இருந்தது.

இச்சம்பவம், என்னை ஆழ்ந்து சிந்திக்கும்படி செய்தது, மாணவர்களைத் திருத்துவதற்குச் சிறந்த முறையையும் அது எனக்குப் போதித்தது. ஆனால், அம்முறை நான் கூறிய அந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வளவு தூரம் பயன்பட்டிருக்கும் என்று நான் கூற முடியாது. இளைஞன் சீக்கிரத்திலேயே அச் சம்பவத்தை மறந்துவிட்டான். எப்பொழுதேனும் அவனிடம் அதிக அபிவிருத்தி காணப்பட்டதாகவும் எனக்குத் தோன்றவில்லை. ஆனால், இச் சம்பவம் மாணவர்கள் விஷயத்தில் உபாத்தியாயரின் கடமை என்ன என்பதை நான் நன்றாக அறிந்துகொள்ளும்படி செய்தது.

சிறுவர்கள் தவறாக நடந்துகொண்டுவிட்ட சம்பவங்கள் இதற்குப் பிறகும் நடந்தது உண்டு. ஆனால், அடி கொடுக்கும் தண்டனையில் அதன் பிறகு நான் இறங்கியதே இல்லை. இவ்விதம் என்னிடம் இருந்த சிறுவர் சிறுமியருக்கு ஆன்மிகப் பயிற்சி அளிக்க நான் செய்த முயற்சியில் ஆன்மாவின் சக்தியை மேலும் மேலும் நன்றாக நான் அறியலானேன்.

## ஓவியங்கள்:


**5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து தனக்குப் பிடித்த "சைவப் பிராணிகள்" என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்க்கப்படுகின்றன.**

**சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்கக் கட்டுரைகள் மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைபடத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**குறிப்பு:**

**நமது அருள்ஜோதி அன்ன ஆலயத் தொண்டினில் பங்கேற்றுள்ள அருளாளர்களாகிய தாங்களும், நமது இல்லத்திற்கு வருகின்ற சேவாதாரிகளிடம், தங்களின் தொண்டு அனுபவங்களைப் பகிர்ந்து பதிவு செய்வதன் மூலமாக, அவ்வனுபவங்கள் அருள்ஜோதி புத்தகத்தில் மகிழ்ச்சியுடன் வெளியிடப்படும்.**

# 154 ஆவது தைப்பூச பெருவிழா
# இல்லங்களின் அன்னதானம்










# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

## (மூன்றாவது தத்துவம்)

## பொய்மை நீக்கிக்காணக் காட்டுதல்

இவ்வுலகமும், உலக உயிரினங்களும், உலகத்துப் பொருட்கள் ஒவ்வொன்றும் ஐந்து பூதங்களின் வேறு வேறுபட்ட கலவை அளவால் தோன்றியவைகளே ஆகும்.

ஒரு மனித உடலுக்குப் பூதங்களின் கலவை அளவு மண் 5 பங்கு, நீர் 4 பங்கு, தீ 3 பங்கு, காற்று 2 பங்கு, வான் ஒரு பங்கு. இந்த விகிதாச்சாரத்தில் பூதங்கள் ஒரு புள்ளியில் கூடும் பொழுது அவ் விடத்தே ஒரு மனித உடல் தோன்றுகிறது என்பது நம் ஞானிகளின் கணக்கு.

ஒரு பசுமாட்டிற்கு இக்கலவை விகிதம் மாறுபடும். இவ்வாறு உலகில் உள்ள, கடல் வாழ் உயிரினங்கள் முதல், உல கத்தில் கல், மண்ணிலிருந்து எத்தனை பொருள்கள் உள்ளனவோ அத்தனையும் பூதக் கலப்பின் அளவு விகிதமே ஆகும்.

இவ்வாறுள்ள ஐந்து பூதங்களின் கலப்பு கள் 12 லட்சத்து எட்டாயிரம் கோடியாக விரிவுப் பெறுகின்றது என வள்ளலார் தம் உரை நடைப் பகுதியில் கூறுகிறார்.

இவ்வளவு பூதக் கலப்பையும் வள்ள லார் அறிந்திருக்கிறார். அதனால் தான் அவரால் எண்ணிக்கை கூற முடிகிறது. இந்தப் பூதக் கலப்பு என்பது இயற்கை உண்மை இரகசியம். இந்த இயற்கை உண்மை இரகசியத்தை ஆண்டவரை அன்றி எவராலும் அறிய முடியாது.

படைப்புக் கடவுளாகத் தொழில் செய்யும் பிரம்மனுக்கும் இது தெரியாது. அவனுக்கு கர்பத்துள் வளரும் உருவை மட்டுமே காத்துப்படைப்பானே அன்றி, அந்த உருவத்திற்குரிய இயற்கை உண்மை தெரியாது.

இப்படிப் பூதாதிகளைப் பொருத்தும் பொருத்தம், மற்றும் பகுதிப் பொருத்தம் அனைத்தையும் தனக்குப்பொய்யில்லாமல் மெய்யே மெய்யாக ஆண்டவர் காட்டித் தெரிவித்தார் என்கிறார்.

இப்பெரிய 12 லட்சத்து எட்டாயிரம் கோடியாக விரியும் பூதக் கலப்பை அதன் இயற்கை உண்மையை ஆண்டவர் மெய் யாகக் காட்டக் கண்ட ஞானிகள் எவரு ளர்? எங்குளர்? பாடலைப் பார்ப்போம்

**பூதா திகனைப் பொருத்தும் பகுதிப்**
**பொருத்தம் முற்றுமே**
**பொய்ம்மை நீக்கிக் காணக் காட்டித்**
**தெரித்தாய் மற்றுமே–4995**

### ஐம்பூதங்கள், சத்தர், சத்திகளைத் தாம் ஏவல் கொண்டது.

இந்த உலகத்தை உலகத்துப் பொருட் களை உயிரினங்களைப் படைப்பது ஐம் பூதக் கலப்பு. அண்டங்களை, அதன் பகு திகளைப் படைப்பது சத்தர் சத்திகள், பிண்டத்தில் உள்ள அனைத்தும் அண்டத் தில் உள்ளன என்பது ஞானிகளின் கூற்று ஆக, பிண்டத்துள் அண்டம் உள்ளது. ஐம் பூதங்களால் ஆன இவ்வுடலுக்குள், சத்தி, சத்தர்கள் உள்ளனர். அதுவும் கோடான கோடிச் சத்தர்கள் உள்ளனர் என்றும், அவர்களே உயிரினங்களின் உடல் உறுப்பு, அசைவு, அறிவு போன்ற உறுப்புகளை

மிகச் சரியாகச் செய்கின்றனர் எனப் பல பாடல்களில் பெருமானார் பாடுவார்.

கர்ப்பத்துள் ஒரு உடல் எப்படித் தோன்றுகிறது என்று 5640ஆம் பாட்டிலிருந்து 5669ஆம் பாடல் வரை 30 பாடல்களில் விளக்குகிறார். இது திருவடிப் பெருமை என்ற தலைப்பில் வருகிறது. அதில் சத்தி சத்தர்களின் அளப்பரிய ஆற்றலை விதந்தோதுவார் பெருமான்.

இவ்வாறு உலகை உருவாக்கும் பூதங்கள், உயிரினங்களை உருவாக்கும் சத்தி, சத்தர்கள் மற்ற கருவிகள் அனைத்தும் வள்ளலார் தம் வாய்ச் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, அவர் கூறியவற்றைக் கூறியவாறு செய்து முடிக்குமாம். பாடலைப் பார்ப்போம்.

**பூதமுத லாயபல கருவிகள் அனைத்துமென்**
**புகல்வழிப் பணிகள் கேட்பப்**
**பொய்படாச் சத்திகள் அனந்தங்கோ டிகளும் மெய்ப்**
**பொருள்கண்ட சத்தர் பலரும்**
**ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங்**
**கிசைந்தெடுத் துதவ என்றும்**
**இறவாத பெருநிலையில் இணைசொலா இன்புற்**
**றிருக்கயெனை வைத்த குருவே**
**–3673**

இவ்வாறுள்ள சக்திகள், சத்தர்களைப் பற்றிப் பெருமானாருக்கு முன்பு வந்த எந்த ஞானிகளும் அறியவே இல்லை. சொல்லவே இல்லை. அப்படியிருக்க சத்தி, சத்தர்களின் வேலைகள் இவை எனக் கூறி, அவர்களையும் தம் சொற் கேட்கும்படியான உயர்நிலையில் வள்ளலார் இருந்தார் எனில் அவர் பெற்ற பெரும் பேற்றை யாரே பெற்றார்கள்?

## வள்ளலாரின் உண்ணா நோன்பின் நீட்சி

வள்ளலார் தாம் உணவு உண்ணாதே இருந்தவர் என்றும், நான்கைந்து நாளுக்கு ஒருதரம் ஐந்தில் மூன்று பங்கு போக இரண்டு மடங்காக காய்ச்சிய சுடுநீரையே பருகிவந்தார் என்றும், அதுவும் பிறர் அந்தப் பாத்திரத்தைத் துணி கொண்டு



தூக்கினாலும் சுடும் என அறிந்து கொரடு கொண்டு பிடித்துத் தூக்கித் தர அதனைத் தம் கரங்களால் வாங்கி அப்படியே அண்ணாக்கப் பருகி விடுவார் என்றும் ஒரு செய்தியைக் கூறுவார்கள்.

பிள்ளைப் பெரு விண்ணப்பத்தில் மூன்று நான்கு பாடல்களில் தாம் உண்ணுவதற்கு அஞ்சி இருந்ததாகப் பாடுகிறார். அதில் பெற்ற தாயின் வருத்தத்திற்கு அஞ்சி வயிறு நிறையச் சாப்பிட்டேன் சில நாள். அடுத்து மற்றவர், அன்பர்கள் நான் சாப்பிடாவிட்டால் அவர்களும் சாப்பிடாமல் இருப்பார்கள், அவர்களின் வாட்டத்தைப் பார்ப்பதற்கு அஞ்சியதால் உண்டேன். இது தவிர நான் உண்ண வேண்டும் என நினைக்கவே இல்லை. அப்படி நினைக்கவும் என் மனம் நடுங்கியது என்கிறார்.

**உற்றதா ரணியில் எனக்குல குணர்ச்சி**
**உற்றநாள் முதல்ஒரு சிலநாள்**
**பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப்**
**பேருணவு உண்டனன் சிலநாள்**
**உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம்**
**உறுவதற் கஞ்சினேன் உண்டேன்**
**மற்றிவை அல்லால் சுகஉணாக் கொள்ள**
**மனநடுங் கியதுநீ அறிவாய் –3440**

என்றும், 'இன்புறு உணவு கொண்டபோதெல்லாம் இச்சுகத்தால் இனியாது துன்புறுங் கொல்லோ என்றுளம் பயந்து சூழ் வெறும் வயிற்றொடும் இருந்தேன்"– 3439

*"களிப்புறு சுகமாம் உணவினைக் கண்ட காலத்தும், உண்ட காலத்தும் நெளிப்புறு மனத்தோடு அஞ்சினேன்" 3438 என்றெல்லாம் தாம் உணவு உண்ணாது இருந்ததையும், உண்ணுதற்கு உள்ளம் நடுங்கியதையும் வள்ளல் கூறுவார்.*

*ஏன் இவ்வாறு அவரது உள்ளம் உண்ண மறுத்தது? என்ற வினாவிற்கு விடை காணாமல் நீண்டநாள் தேடினேன். அருட்பாவுள் ஒரு பாடலுள் அவரின் உண்ணா நோன்புக்கு அவரே விடையளித்துள்ளார்.*

*இவ்வுலகில் செல்வம் உடையவர்கள் நன்கு உண்டு கொழுத்துத் திரியவும், வறியவர்கள் தமக்கு உற்ற பசியால் வெந்து, துயரத்தால் வாடி நெஞ்சம் வருந்தி அவர்கள் இருப்பது நியாயமா? என இந்த நிகழ்வை நான் நினைத்திடும் போதெல்லாம், என் உள்ளமும், உடலும் எரிகின்றது. என்ன செய்யப் போகிறேனோ? இவ்வாறு நாட்டில் வறியவர்கள் பசியால் வெந்து துயரால் நெஞ்சம் வருந்தாமல் எல்லோர்க்கும் உணவு கிடைத்து, எல்லோரும் சுகமாக உண்ணுவது வரை, அது எவ்வளவு காலம் ஆனாலும் உணவு என்பதை எடுக்க மாட்டேன். உட்கொள்ள மாட்டேன் என ஆண்டவரிடம் கூறுகிறார்.*

*வள்ளலாரின் உண்ணா நோன்பு உலகில் வறியவர்கள் பசியிலிருந்து விடுபட்டு அனைவருக்கும் உணவு தடையின்றிக் கிடைக்கும் வரையும் நீண்டது என்றால், இப்படி ஒரு வைராக்கியம், இவ்வளவு பெரியதாக யாரும் எடுக்கவில்லை. வள்ளலார் மிகப் பெரியவர் ஆதலினால் பெரிய குறிக்கோளை எடுத்தார்.*

*இப்படி எந்த ஒரு ஞானி உலகின் வறியவர்கள் மேல் தன் கவனத்தை, திருப்பி அவர்களின் மேல் இரக்கமும் அன்பும் பரிவும் காட்டி, ஆண்டவன் மேல் சத்தியமிட்டு உண்ணா நோன்பு ஏற்றனர். கருணையே வடிவான, இரக்கமே தான் ஆன வள்ளலார் உரைக்கும் இக்கருத்தையுடைய பாடலைப் பார்ப்போம்.*

**உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்**
**உறுபசி உழந்துவெந் துயரால்**
**வள்ளலே நெஞ்சம் வருந்தவும் பசியால்**
**மற்றிதை நினைந்திடுந் தோறும்**
**எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்**
**எரிகின்ற தென்செய்வே னந்தோ**
**கொள்ளலேன் உணவும் தரிக்கலேன் இந்தக்**
**குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்–5382**

## தன் உணவுக்கே வழியில்லாதவர்கள் ஜீவகாருண்யம் என்ற வழிபாட்டை எப்படி செய்வது?



இல்லறத்தார்கள் தமது தாய், தந்தை, மனைவி, மக்கள் நட்பு ஆகியோரைப் பசியில் தவிக்கவிட்டு தம்மிடம் பசியாற்றத் தொடங்குவதும், தம்மிடம் பசித்து வந்தவர்களுக்கு உணவளிக்காமல் தம் குடும்பத்தார் பசியை மட்டும் ஆற்றத் தொடங்குவதும் கடவுளுக்கு சம்மதம் அல்ல. ஆதலால் தமது குடும்ப செலவைக் கூடிய விரைவில் சிக்கனம் செய்து இருதரத்தார் பசியையும் நீக்குதல் வேண்டும் என்பார் வள்ளல் பெருமான். தமது குடும்பத்தாருக்கு மட்டும் பசியாற்றும் வகையில் மிகக் குறைந்த வருமானம் உடையவர்கள், பசியோடு தம்மிடம் வந்தவர்களிடத்தில் கருணையோடு அவர் பசியை மற்றவர்களிடத்தில் கூறியாவது ஆற்றுவிப்பதற்கு தக்க முயற்சி எடுக்க வேண்டும் என்பார் வள்ளல் பெருமான். மேலும் தன்னால் எவ்வகையிலும் பசியாற்ற முடியாத நிலை ஏற்படும் பொழுது கருணை உணர்வோடு ஆண்டவரிடம் அவர்களுக்காக பிரார்த்தனை செய்து இனிய சொற்களை கூறுவதே புண்ணியம் என்பார். யாருக்கு எந்த துன்பம் வந்தாலும் அந்த துன்பத்தை நம்மால் நீக்க முடியாவிட்டாலும், அந்தத் துன்பம் நமக்கு வந்தது போல் உணர்ந்து அது நீங்க ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்வதும் ஜீவகாருண்யம் ஆகிறது.

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு. வெங்கட்ராமன் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திரு. ப.ஐயப்பன் ஐயா



திரு.ரா.பங்காரு



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள்,**

**மற்றவர்கள் அன்ன ஆலயப் பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

# 90030 34056

ARUTPERUNJOTHI THANIPERUNKARUNAI | Thiruchitrambalam | ARUTPERUNJOTHI ARUTPERUNJOTHI

## THE GREAT ENTREATIES OF THE CONGREGATION OF THE COMMON AND ULTIMATE SPIRITUAL PATH OF TRUTH AND RECONCILIATION &

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கப்பெரு விண்ணப்பம்

## [SAMARASA SUTHTHA SANMAARKKA SATHTHIYA SANGA PERUVINNAPPAM]

The increase in the presence of the Air, Heat, Coldness, the places for their existence and the places for their function; the powers such as the power of the sun, power of the moon, power of the heat, power of the star, the creative power[Brahma sakthi] the illusory power [Maayaa sakthi], the destructive power[Rudhra sakthi] etc. the places for their existence and increase; the Forces[Saththarhal] who govern those powers, the places for their existence and increase; the various state of existence viz conscious state[Nanavu], Dream state[Kanavu] state of deep sleep [Suluthi] etc.; the places for their existence; In addition to this, many other innermost organs and inner organs; Different kinds of **skins** like meethol, pudaithol, vanthol, menthol etc., Different kinds of **nerves** like vennarambu, sennarambu, pasunarambu, sirunarambu, perunarambu etc. Various kinds of **bones** like perenbu, sittrenbu, neetenbu, mutakkenbu etc; various kinds of **blood** like naleraththam, puleraththam, kalavaieraththam, kabilaieraththam etc.; various kinds of **tissues** like meleraichi, kaleraichi, manraaichi, neeraichi etc.; various kinds of **semen** [sukkilam] like mainilaisukkilam, keelnilaisukkilam etc; different types of **brain** like oongaara mooulai, Aangaara mooulai etc; Different types of **Divine nectar** [Amudam] like Thalaiamudam, Edaiamudam etc; the variety of **colours** like white, red, green, black, yellow; varieties of other colours made out of **combination of colours** like red in white, green in white, black in white, yellow in white, white in red, green in red, black in red, yellow in red, yellow in green, white in black, red in black, green in black, yellow in black, white in yellow, red in yellow, green in yellow, black in yellow, the places for existence of these colours types of their function, kinds of their usefulness; In addition to this, so many other outer organs and the outermost organs were provided all together in this physical body with a view to assist me. Oh God! How shall I come to know and contemplate the absolute power of the divine Grace! How shall I think about it! In what way shall I worship?

Oh God! The knowledge of Truth, and the goal of the aspirants of the common and ultimate spiritual path! [Suththa Sanmaarkka Latchiaam]; Without getting my birth in the other parts of this large world about which the human beings are not aware of wherein only the serious faults such as greediness, extreme anger, too much Desire, too much conceit, so much worldly attachment, so much hatred, extreme arrogance, complete lack of senses, so much confusion etc. thrive, by the act of Grace made me to be born in the place where mostly good characters alone flourish without any deformities and in the superior birth of this Human birth. Oh God! What shall I think about the power of that Divine Grace and Supreme Mercy! In what way shall I worship?

शुद्ध-सन्मार्ग का पहला साधन

# जीवकारुण्य शीलता

## JEEVAKARUNYA GOOD DISPOSITION (HINDI)

## ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஹிந்தியில்)

### 18. जीवकारुण्य का मुख्य लक्ष्य क्या होता है?

सारी आत्माएँ, प्राकृतिक सच्चाई के सार्वभौमिक रूप में होकर प्राकृतिक स्पष्टीकरण की कृपा बुद्धि की भी बुद्धि के रूप में प्रकटित होने के लिए, एकता के अधिकार के स्थानों के रूप में होती हैं और वे आत्माएँ जीव होकर अधिक विस्तृत होने के लिए भूत-कार्य देहों का ही आधिपत्य होता है। उन देहों पर आत्माएँ जीवों के रूप में होकर विस्तृत न होंगी तो आत्माओं का स्पष्टीकरण लुप्त हो जायेगा और उसके कारण ईश्वर के अनुग्रह का स्पष्टीकरण प्रकट नहीं होगा और तब स्तब्ध हो जायेगा और वही आत्माओं का बन्धन हो जायेगा और इसीलिए भूतकार्य देह की आवश्यकता पड़ती है और भूत कार्य देहों का मूल कारण माया होने से, उस माया के विकल्प जादुओं के रूप में होनेवाले भूख, प्यास, रोग, इच्छा, दीनता, भय, हत्या आदियों से उन देहों को बार-बार आफतों का सामना करना पड़ता है। और आफतों के न घटने की दृष्टि से, कर्णेन्द्रियों की सहायताओं को पायी बुद्धि के सहारे बड़ी सावधानी के साथ प्रयास करके इन्हें रोकने के लिए उचित अल्प स्वतंत्रता तो जीवों को ईश्वरीय अनुग्रह से दी गयी है और उस स्वतंत्रता को लेकर सभी जीव अपने देहों से आफतों को हटाकर आत्मलाभ प्राप्त करने के लिए प्रयत्न करना पड़ेगा और प्रारब्ध के कारण से और असावधानी के कारण से भूख, प्यास, रोग, इच्छा, दीनता, भय, हत्या आदि बातों से होनेवाली आफतों की निवृत्ति न कर सकने की स्थिति में, दुखी होनेवाले जीवों के विषय में उनकी निवृत्ति करने योग्य स्वतंत्रता रखनेवाले जीव तो कारुण्य से निवृत्ति करना चाहिए और



















# 154 ஆவது தைப்பூச பெரு

## அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அரு

### அருளாளர்களின்  தொண்டினாலும் சிறப்பாக ந













# நவிழா

## நளாலும்,

## டைபெற்றது.



# ஆத்ம தரிசனம்

***சீடன் : இரட்டை ஆத்மாக்கள், ஜன்ம ஜன்மமாக இருவருக்குமிடையே இருக்கும் தனிப்பட்ட பாசத்தால் பிறக்கின்றனவா?***

*குரு :* அவை இரட்டை ஆத்மாக்கள் அல்ல. கொடுமையான புற்று நோயான பாசத்தினால் இவர்கள் இரட்டையாகப் பிறக்கிறார்கள். ஆரம்பத்தில் இது ஒரு சிறிய பரு அல்லது கட்டி போல் இருக்கும். பிறகு, நீ 'பாசம்' என்று கூறுவதற்கு முன்பே அது மிகவேகமாகப் பரவும். இது மிகவும் கவனத்துடன் நோக்க வேண்டிய விஷயமாகும். பாசம் பகையை வளர்க்கக் கூடாது. உன்னிடம் புனிதமான அன்பு உள்ளது. ஆனால், அதன் எல்லையில் பகை ஒளிந்திருக்கிறது. அதனால் நாம் பாசத்தை ஒரு விளக்காக எடுத்துக் கொண்டு வெளியே இருப்பவர்களைப் பார்க்கலாம். அப்போது இவ்வுலகின் எழில் நம்மால் அதிகரிக்கும்.

***சீடன் : விழிப்புணர்ச்சிதான் நம்மைத் தனிப்பட்ட பாசத்தில் முழுகாமல் தடுத்து நிறுத்துமா?***

*குரு :* ஆம்; விழிப்புடன் இருந்தால் அதைத் தவிர்க்கலாம். நீ உன் வழியில் நட; பிறர் விஷயத்தில் தேவையில்லாமல் தலையிட்டால் சிக்கிக்கொள்வாய். அதனால், உன் எல்லையை மீறிச் செல்லாதே.

***சீடன் : சிலரிடம் மட்டுமே தனிப்பட்ட பாசத்துடன் நாங்கள் இருக்கக் கூடாது என்று கூறினீர்கள். ஆனால், சிலருடன் எங்களுக்குப் பொதுவான விஷயங்களில் ஈடுபாடு உள்ளது. அது நல்ல விஷயங்களில்தான் என்றாலும் அதுவும் இந்தத் தனிப்பட்ட பாசத்தை உண்டாக்குகிறது அல்லவா? அதற்கு என்ன செய்வது?***

*குரு:* பொதுவான விஷயங்களில் உள்ள ஆர்வத்தால் நெருக்கம் தோன்றினால் பரவாயில்லை. ஆனால், அதிலும் நீ எல்லையை மீறிச் செல்லக்கூடாது. பொது விஷயங்களில் உனக்கிருப்பதைப் போன்ற ஆர்வம் யார்யாருக்கு உள்ளதோ அவர்களிடம் மட்டுமே நீ நெருக்கம் கொள்வதால் வாழ்க்கையின் ஒரு வியக்கத்தக்க அம்சம் உனக்குப் புலப்படாமலே போய்விடக்கூடும். உலகத்தின் அழகு பல விதமான விஷயங்களைப் பொறுத்தது. அப்படிப் பல விதங்களும், ரகங்களும் இருப்பதால்தான் இயற்கையில் ஈடுபடும் தன்மை மாறாமல் நிலைத்து இருக்கிறது. அதனால் காத்துக்கொண்டிரு.

நீ கவனத்துடன் இருந்தால், நீ இதுவரை காட்டாத பல அரிய ஈடுபாடுகளைப் பிறரிடம் காண்பாய். அவற்றில் நீயும் ஆர்வம் கொள்ளத் தொடங்கினால், உன்னுடைய வாழ்க்கை மேலும் அழகாகும். அழகை வணங்கினால் மட்டும் போதாது, அதை வளர்த்து அதிகரிக்கவும் வேண்டும்.

***சீடன் : ஒருவன் தன்னை அறியாமல் எந்தத் தருணத்தில் தனிப்பட்ட பாசத்தில் சிக்கிக்கொள்வான்?***

*குரு :* இது ஒரு நல்ல கேள்வி. ஒன்று, நீ எதைக் கண்டும் ஆச்சரியப்படாமல் இருக்க வேண்டும் அல்லது இயற்கையின் அழகைக் கண்டு வியப்படையும் தன்மை நிரந்தரமாக இருக்க வேண்டும். இதைப் பற்றி விரிவாகக் கூறுகிறேன். நீ யாரைக் கண்டாலும், யார் உன்னுடைய வீட்டின் கதவைத் தட்டினாலும், அவர்களைக் கண்டவுடன் உன் முகத்தில் ஆச்சரியமும், அன்பும் இருக்க வேண்டும். இது எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். நீ ஒரே மலரை நூறு முறை பார்க்க நேர்ந்தாலும் சலிப்பு அடையாமல் ஒவ்வொரு முறையும் அதன் அழகைப் பாராட்டி வியந்து ரசிக்கக் கற்றுக்கொள். ரசித்து வியக்கும் தன்மையை எக்காரணத்தை

முன்னிட்டும் இழந்துவிடாதே. அன்பு வெளிப்படுத்தப்பட வேண்டும். அன்பு பொதுவானதாக இருக்க வேண்டும். அன்பு எந்த நோயையும் குணப்படுத்தும் மருந்து.

நாம் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும். இதுதான் ஆன்மிகப் பாசத் தின் தன்மை. எந்த விதமான வேற்றுமை யும் பாராட்டக்கூடாது. வேற்றுமை இருந்தால் அது தனிப்பட்ட பாசமாகும். இன்னொன்று, முற்பிறவியின் தொடர்ச் சியாக விவரிக்க முடியாத நினைவுக ளால்கூட இது தோன்றலாம். ஆனால், அதையும் நீ தவிர்க்க வேண்டும். நீ மீண்டும் பிறந்துவிட்டாய் என்ற பிறகு, உன் முற்பிறவி உனக்கு ஒரு பொருட் டல்ல. பிறவிகள் மீண்டும் மீண்டும் ஏற் படுபவை. அப்படி ஏற்படுவதை உன் நன்னடத்தையாலும், ஆன்மிக வழியில் செல்வதாலும் நீ உடைக்க வேண்டும்.

***சீடன்: இந்த 'விழிப்புணர்ச்சி' அது ஒவ் வொருவருக்கும் பிறக்கும் போது உடன் வருவதா? வளர வளர அது மங்கிவிடு கிறதா?***

*குரு :* அதன் வளர்ச்சி பாசத்தால் குன் றிவிடுகிறது. மறதிதான் அதை மூடும் கத வாகும். ஆனால், விழிப்புணர்ச்சி எல்லா வற்றையும் மீட்டுத் தருகிறது.

இந்த விழிப்புணர்ச்சியை நீ பற்றி இருந்தால், உனக்குப் புரியாதவைகூட விவ ரிக்கப்படும். மனிதன் இறக்கும் பொழுது அவனுக்கு அவனுடைய வாழ்க்கை எப் படிப் பொதுவான முறையில் விவரிக்கப் படுகிறதோ அது போல் இருக்கும், விழிப் புணர்ச்சி புகட்டும் பாடமும்.

***சீடன் : சில சமயங்களில் நாம் சிலரு டன் நன்றாக ஒத்துப்போகிறோம். சில ருடன் அவ்வாறு முடிவதில்லை. நாம் ஒவ்வொருவருடனும் இணைந்திருக்க என்ன செய்வது?***

*குரு :* பிறருடன் ஒத்துப்போகும் தன்மை இல்லாமல் இருப்பது உன்னுடைய தவறு தான் என்பதை முதலில் நீ ஒப்புக்கொள். சிலருடன் நீ கொள்ளும் பிரத்யேகமான தனிப்பட்ட ஈடுபாடு உன்னைப் பிறரி டமிருந்து பிரித்துவிடும். ஒரு சங்கத்தில் உள்ள எல்லோரிடமும் உன்னால் ஒரே மாதிரி நடந்து கொள்ள முடியவில்லை என்றால், நீ அதிலிருந்து விலகிவிடுவதே மேல். கை செய்யும் வேலையைக் கால் செய்வதில்லை. ஆனால், கை, காலுடன் நன்றாக இணைந்து செயல்படுகிறது. இதயம் உடலின் மிகவும் அவசியமான ஓர் உறுப்பு. நீ உட்கொள்ளும் உணவு நேரிடையாக உன் இதயத்துக்குச் செல் வதில்லை. அது முதலில் உன் வயிற்றுக் குச் செல்கிறது. இருப்பினும் இதயமும் வயிறும் ஒன்றோடொன்று ஒத்திருந்து நன்றாகச் செயல்படுகின்றன. உருவத்தி லும் அளவிலும் செய்யும் வேலைகளிலும் வேற்றுமை இருந்தாலும் அவை ஒன்றுக் கொன்று இணைந்து செயல்படுகின்றன.

நீயும் அது போல இருக்க வேண்டும். கண்ணாடியில் உன் முகத்தைப் பார்க்கும் பொழுது உனக்கு ஏற்படும் மகிழ்ச்சி, அடுத் தவன் முகத்தைப் பார்க்கும் பொழுதும் உனக்கு ஏற்பட வேண்டும்.

***சீடன்: மனிதர்களுக்குக் குடும்ப உறவு கள் தற்செயலாக ஏற்படுபவையா?***

*குரு :* அவை தற்செயலாக ஏற்படுவ தில்லை. முன்வினைப் பயனால் அவை ஏற்படுகின்றன. அதனால்தான், பெரிய மகான்கள் மனிதனை அவன் குடும்பத்தை விட்டு விலகி இருக்குமாறு சொல்வதில்லை. உன் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபருக் கும் நீ கடன்பட்டிருக்கும் கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றால், நீ கர்மச்சுழலைப் பூர்த்தி செய்யமாட்டாய். உன் கடமைகளையும், உன் குடும்பத்தை யும் விட்டு ஓடினால், வினைப்பயனை மேன்மேலும் அதிகரித்துக்கொள்வாய். நீ குடும்பத்தில் இருந்துகொண்டு, உன் கடமைகளைச் செய்து வா; அதே சமயத் தில் விடுபட்டும் இரு.

***சீடன் : குடும்ப உறவுகள் அவ்வாறு அமையக் காரணம் என்ன? என் தந்தை என்ன காரணத்தினால் இப்பொழுது என் தந்தையாக இருக்கிறார்? அவர்***

***முற்பிறவியில் எனது நெருங்கிய நண்பனாய் இருந்திருப்பாரோ? இதை விளக்குவீர்களா?***

**குரு** : *இல்லை! இல்லை! அவ்வாறு இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை.*

*உன் தந்தை முற்பிறவிகளில் உனது விரோதியாகக்கூட இருந்திருக்கலாம். அதற்குப் பிறகு நீங்கள் இருவரும் வெவ்வேறு ஜன்மங்களில் இயைந்திருக்கப் பழகி, இப்பொழுது உனக்கு அவர் அன்புத் தந்தையாகவும், நீ அவருடைய அன்பு மகனாகவும் இருக்கும் நிலைக்கு வந்திருக்கலாம். ஒன்றை நினைவில் வைத்துக்கொள். எந்த உறவும் சுமுகமாக உள்ளதா என்று முதலில் பார். நான் 'உறவு' என்று, ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, தந்தை, மகன், சகோதரன், சகோதரி போன்ற உறவுகளைக் குறித்துக் கூறுகிறேன். இருவருக்கிடையிலான உறவு சுமுகமாக இருந்தால், அவர்களைப் பொறுத்தவரையில் ஒருவருக்கொருவர் இருக்கும் கர்மாக்களுக்கு முடிவு ஏற்பட்டு, அந்த உறவில் விடுதலை தொடங்கிவிட்டது என்று பொருள். அவர்களுக்கிடையில் உள்ள வினைகளும் அவற்றின் விளைவுகளும் ஒரு தீர்வு நிலையை அடைந்துவிட்டன என்று பொருள். அப்படி ஒரு சுமுகமான உறவு உனக்கு ஏற்பட்டால் அந்த வினைச் சுழலில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கும் பொருட்டு அந்தச் சுமுகமான நிலையைத் தக்க வைத்துக் கொள்வதற்கு முயற்சி செய். அப்பொழுது அங்கே அன்பு ஏற்படுகிறது. நீ எல்லோரிடமும் அன்பாக இருந்தால், நீ கர்மா அல்லது வினைப் பயனில் சிக்கிக்கொள்ளமாட்டாய். அதனால்தான் அன்பைப் பிரச்சாரம் செய்கிறார்கள். அன்பு மேன்மையானது. அது எல்லாவற்றையும் கடந்து இருப்பது.*

*யாருமே தற்செயலாக ஒரே குடும்பத்தில் பிறப்பதில்லை. எந்த உறவுக்கும் வினைப்பயனே காரணம். அதனால் உறவுகள் சுமுகமாக இருக்க வேண்டும். சில தவிர்க்க முடியாத சூழ்நிலையினால் உறவை எந்த விதத்திலும் சுமுகமாக வைத்துக்கொள்ள முடியவில்லை என்றால், அப்பொழுது அங்கே வெறுப்போ, விரோதமோ ஏற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள். அது உனக்கு ஒரு பாதுகாப்பாக அமையும்.*

*உனக்குப் புரிவதற்காக ஒரு குடும்பத்தைப் பற்றி விளக்கினேன். இப்பொழுது நண்பர்களுக்கு வரலாம். நட்பும் தற்செயலாக ஏற்படுவதில்லை. ஆனால், விரும்பித் தேர்ந்தெடுத்துக்கொள்வது ஆகும். நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதும் வினைப்பயன் தான். நீ முற்பிறவியில் உன் நண்பனின் மகனாகக்கூட இருந்திருக்கலாம். இப்படி ஒரு சாத்தியக்கூறு உண்டு என்பதை நீ உணர்ந்து புரிந்துகொண்டால், அப்பொழுது உண்மையான குடும்பம் என்ன என்பது உனக்குத் தெரியவரும். அதனால்தான் பெரிய மஹான்கள், மனிதன் அவன் குடும்பத்தை விட்டுச் செல்வதை ஆமோதித்ததேயில்லை. நீ உன் பெற்றோருக்குப் பிறந்திருக்கிறாய். அது ஒரு குடும்பம். அங்கே உன் உறவுகள் சுமுகமாக இருப்பதை உறுதி செய்துகொள்வது உன்னுடைய முதல் கடமை. எல்லோரையுமே ஒரே குடும்பமாகப் பார்ப்பது சாலச் சிறந்தது. முதலில் உன்னுடைய பெற்றோரையும், உன் நண்பர்களையும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்களாக நடத்தப் பழகு.*

***சீடன்: கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இருக்கும் உறவு ஜென்ம ஜென்மமாக அதே போல் தொடர்கிறதா?***

**குரு** : *சில அவ்வாறு, சில அவ்வாறில்லை.*


***சீடன்: 'கணவன்மனைவி' என்ற உறவை நிர்ணயிப்பது எது?***

**குரு** : *நான் உனக்குச் சில விஷயங்களைக் கூறுகிறேன். சில கணவன் மனைவி ஜோடி, ஜென்ம ஜென்மமாக இணைந்திருக்கும். அவர்களுடைய தன்மையால், மீண்டும் அதே போல் பிறந்து ஜோடியாக வாழ்கிறார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கிறார்கள்.*

ஆனால், எதற்காக மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்க வேண்டும்? பிறப்பை நிறுத்தவேண்டுமென்றால் மரணத்தைக் கடக்க வேண்டும் அல்லவா ? அப்பொழுது இணைந்து இருக்கும் தன்மையே அதற்குத் தடையாகிவிடுகிறதே! புரிகிறதா? இணைந்திருக்கும் தன்மையைப்பற்றிப் பெருமை கொண்டு, அதற்குத் தேவையில்லாமல் முக்கியத்துவம் கொடுத்தால், அந்த ஜோடி மீண்டும் மீண்டும் சேர்ந்திருக்கும்பொருட்டுப் பிறப்பெடுத்தாக வேண்டும்.

சில சமயங்களில் சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ, அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கோ, கூட்டத்திற்கோ சேவை செய்வதற்காக இருவர் இணைந்து பிறப்பெடுக்கலாம்.

முனிவர்கள் கீழே இறங்கி வந்து பிறப்பெடுத்தால் அவர்களுடைய பத்தினிகளுடன்தான் வருவார்கள். ஒரு முனிவரின் பத்தினி முனிவரைவிட எந்த விதத்திலும் குறைந்தவரல்ல. முனிவர் அவ்விதமாக இருப்பதற்கு அவருடைய பத்தினி ஒரு முக்கியமான காரணம். அதனால் முனிவர் தனியாக வரமுடியாது. மீண்டும் மீண்டும் ஒன்றாகப் பிறப்பெடுத்து வாழும் ஜோடிகளைப் பார்த்தோம். இன்னொரு வகையும் உள்ளது; முற்பிறவியிலோ அல்லது பிறவிகளிலோ ஏதாவது ஒரு வகையில் ஒருவரால் மற்றொருவர் கவரப்படுவதாலும் அவர்களுக்கு இடையில் கணவன் மனைவி உறவு ஏற்படுகிறது. ஒருவருடைய வெளித்தோற்றத்தாலோ அல்லது அவருடைய அக அழகினாலோ கவர்ச்சி ஏற்படலாம். அவர்கள் இருவருமே தங்களை அறியாமல் கர்மச்சுழலில் சிக்கிக்கொள்கிறார்கள். ஒருவர் அதீதமாகக் கவரப்பட்டுவிட்டதாலேயே அந்த மற்றொருவர் அவருக்கு இணையாக இறங்கி வந்து பிறப்பெடுக்க வேண்டிய கட்டாயமும் ஏற்படலாம். அதனால் தான், திடமான மனமும், தடுமாற்றமில்லாத குணமும் இருக்க வேண்டும் என்று போதிக்கப்படுகிறது




# வள்ளல் பெருமானாரின் 154 வது தைப்பூச வருவிழா

# அன்னதான பட்டியல் 2025

| வ.எண் | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1. | மாரி சாமியார் | தண்டையார்பேட்டை. |
| 2. | மீனாட்சி (அகவல் பாராயணம்) | பழைய வண்ணாரப்பேட்டை. |
| 3. | இராம்குமார் அன்பு டீ ஸ்டால் | கொருக்குப்பேட்டை. |
| 4. | பிரகாஷ் | கொரட்டூர். |
| 5. | எஸ்.நாராயணசாமி | அம்பத்தூர் ராமசுவாமி ஸ்கூல். |
| 6. | நிர்மலா குமார் | அம்பத்தூர். |
| 7. | பானுமதி | மாதாவரம். |
| 8. | ஒய்.பாளையம் பரசுராமன் | மாதவரம். |
| 9. | எம்.முனுசாமி | மாதவரம். |
| 10. | நீலாவதி | மாதவரம். |
| 11. | இரமணி–இலக்கியா | அயன்புரம். |
| 12. | ஹரிபாபு | அயனாவரம். |
| 13. | ராஜ்குமார் | அயன்புரம் (சயானி பெட்ரோல் பங்க் எதிரில்) |
| 14. | டி.கே.வெங்கடேசலு | பெரம்பூர். |
| 15. | ஆர்.சீனிவாசன் ரேணுகா | பெரம்பூர். |
| 16. | ஹேமாவதி | பெரம்பூர் (2). |
| 17. | மனோகரன் டீக்கடை | பெரம்பூர். |
| 18. | பரிமளா | ஜி.கே.எம். காலனி. |
| 19. | பக்தராமன் ஆதிலட்சுமி | ஜி.கே.எம். காலனி. |
| 20. | கலைச்செல்வி | ஜி.கே.எம். காலனி. |
| 21. | எம். முனுசாமி | புளியந்தோப்பு. |
| 22. | சுரேஷ் (ஸ்ரீ கிருஷ்ணா ஸ்டோர்ஸ்) | புளியந்தோப்பு. |
| 23. | கமலா சுந்தர்ராஜன் | நம்மாழ்வார் பேட்டை. |
| 24. | வி. ஆறுமுகம் | வியாசர்பாடி. |
| 25. | பி. சுரேஷ் பாபு | எம்.கே.பி. நகர். |
| 26. | லோகநாதன் மளிகை கடை | எருக்கஞ்சேரி. |
| 27. | ஜெயஸ்ரீ ஸ்டோர் உமா அருணாச்சலம் | கொடுங்கையூர் பாண்டி தியேட்டர் எதிரில். |

| | | |
|---|---|---|
| 28. | எ.ஜோதி (விநாயகர் கோவில்) | கொடுங்கையூர். |
| 29. | சுசிலா | வியாசர்பாடி. |
| 30. | மங்கேஸ்வரி | வியாசர்பாடி. |
| 31. | ஜெ.சம்பத்குமார் | ஓட்டேரி. |
| 32. | மணி.பி | புளியந்தோப்பு. |
| 33. | மணிவண்ணன் செங்குட்டுவன் | ஓட்டேரி. |
| 34. | டி.எல்.குமார் | ஜி.கே.எம். காலனி. |
| 35. | பி.சங்கரதாஸ் | வெற்றி நகர். |
| 36. | சரவணன் செல்வி கௌதம் கிரண் | வெற்றி நகர். |
| 37. | வெற்றி விநாயகர் கோயில் | வெற்றி நகர். |
| 38. | ஜி. சேகர் எஸ். தமிழ்வேந்தன் | சூளை. |
| 39. | ஜி. அனுராதா கணேஷ் | சிந்தாதிரிப்பேட்டை. |
| 40. | சிவஜோதி சுவாமிகள் | ஏழுகிணறு. |
| 41. | கோபி ஷியாமளா | வால்டாக்ஸ் ரோடு. |
| | | டெல்லி ஹோட்டல் எதிரில் |
| 42. | பி.சந்தானம் திலகவதி | மதுரவாயல். |
| 43. | நியூ டெக் | அத்திப்பட்டு ரோடு |
| 44. | கோகுல கிருஷ்ணன் | அயப்பாக்கம். |
| 45. | சீனிவாசு கடை | வளசரவாக்கம். |
| 46. | திருமதி. ராணி எஸ்.இராஜேந்திரன் | போரூர். |
| 47. | திருமதி. சுப்புலட்சுமி சர்வேஷ் | போரூர். |
| 48. | எஸ்.எஸ். ஹரி பிரசாத் ராவ் | |
| | சுதா ராணி வாட்ச் கடை | கொருக்குப்பேட்டை. |
| 49. | கே.எ.கௌரி கண்ணய்யா | புது வண்ணாரப்பேட்டை. |
| 50. | எஸ். தங்கதுரை–உண்ணாமலை | எர்ணாவூர். |
| 51. | சாந்தி | எர்ணாவூர். |
| 52. | பவேஷ் தக்ஷன் | எர்ணாவூர். |
| 53. | அர்ஜுனன் விஜயலட்சுமி | விருகம்பாக்கம். |
| 54. | சீனிவாசன் | அசோக் நகர். |
| 55. | இராமகிருஷ்ணன் ஆர்.ஸ்வஸ்திகா | வடபழனி. |
| 56. | பொன்பிரியங்கா | கே.கே. நகர். |
| 57. | ஜெ.வள்ளி | திருவொற்றியூர். |
| 58. | எச்.விஜயலட்சுமி | திருவொற்றியூர். |
| 59. | எ.இராமலிங்கம் சரஸ்வதி | திருவொற்றியூர். |
| 60. | குருமூர்த்தி | திருவொற்றியூர். |

| | | |
|---|---|---|
| 61. | எ.ஹரிஹரன்–ஐஸ் டெய்லர் | மணலி மாத்தூர். |
| 62. | யோகம்–வெங்கடேசன் | மணலி. |
| 63. | பொன்னம்பலம் (எ) மணி | மணலி. |
| 64. | பாலகிருஷ்ணன் | மணலி. |
| 65. | ஜெய்சங்கர் (வாழை இலை கடை) | திருவேற்காடு. |
| 66. | பிரியங்கா திவ்யா | ஆவடி. |
| 67. | சரவணன் ஹேமாவதி | பட்டாபிராம் தண்டுரை. |
| 68. | எஸ்.சீனுமங்கை | பள்ளிக்கரணை. |
| 69. | எஸ்.செல்வம்–திலகம் | பள்ளிக்கரணை. |
| 70. | குமார் | பள்ளிக்கரணை. |
| 71. | வி.செல்வராஜ் | மேடவாக்கம். |
| 72. | கணேசன் வசந்தா சஞ்சய் பாலாஜி | வேப்பம்பட்டு |
| 73. | எஸ்.கௌதம் | ஆதம்பாக்கம். |
| 74. | ஆர்.குமார் | புழுதிவாக்கம். |
| 75. | திருவாளர் கருப்பையா | உள்ளகரம். |
| 76. | வடிவேல் பாலமுருகன் மாவுமில் | உள்ளகரம். |
| 77. | டி.சிவா | சேலையூர். |
| 78. | ஜி.நரசிம்மலு | அனகாபுத்தூர். |
| 79. | ஜோதி | மாடம்பாக்கம். |
| 80. | எம்.கே.கோவிந்தன் வக்கீல் | அண்ணா நகர் மேற்கு. |
| 81. | பவானியம்மாள் விஜயகுமார் | முகப்பேர் மேற்கு. |
| 82. | ஜெயா ஆறுமுகம் | முகப்பேர் கிழக்கு. |
| 83. | டி.இரவிச்சந்திரன்–ஆர்.கார்த்திகேயன் | புதுபெருங்களத்தூர். |
| 84. | பரமசிவம் தீபம் செலக்ஸ் பேன்சி | புதுபெருங்களத்தூர். |
| 85. | ஆர்.கே.சுந்தர் | மேற்கு தாம்பரம். |
| 86. | மணவாளன் தனலட்சுமி | மேற்கு தாம்பரம். |
| 87. | வி.ராஜன் | குரோம்பேட்டை. |
| 88. | இராஜகுமாரி | அண்ணாநகர் மேற்கு. |
| 89. | திருஞானசம்பந்தம் | அண்ணாநகர் |
| 90. | தினேஷ் புவனேஸ்வரி | அண்ணாநகர் மேற்கு. |
| 91. | முருகேசன் | அண்ணாநகர் மேற்கு. |
| 92. | கீதா வேலாயுதம் | மேடவாக்கம். |
| 93. | கே.மூர்த்தி நாகம்மா | பள்ளிக்கரணை. |
| 94. | திருமதி. எஸ்.இந்திரா சுந்தரமூர்த்தி | பள்ளிக்கரணை |
| 95. | கே.சிதம்பரம் | பள்ளிக்கரணை. |





| | | |
|---|---|---|
| 96. | டாக்டர். உமேஷ் ராஜ் | மேற்கு மாம்பலம் |
| 97. | என்.சொக்கலிங்கம் காந்திமதி | மேற்கு மாம்பலம். |
| 98. | ஆனந்தபாபு | கோட்டூர்புரம். |
| 99. | இராமச்சந்திரன் ஜெயஸ்ரீ | ஊரூர் அடையார். |
| 100. | திருமதி. வி.விஜயகுமார் | பெசன்ட்நகர். |
| 101. | மதிவாணன் | சூளைமேடு. |
| 102. | சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில். | சூளைமேடு. |
| 103. | சாந்தி வேதாசலம் வி.ஸ்ருதி | சைதாப்பேட்டை. |
| 104. | கருணாகரன் | சைதாப்பேட்டை. |
| 105. | வாசுகி குணசேகரன் | பாலவாக்கம். |
| 106. | கே.எ.பாண்டியன் | துரைப்பாக்கம். |
| 107. | திருவாளர். ஆறுமுகம் | அடையார். |
| 108. | ரவி ஐயர் | திருவான்மியூர். |
| 109. | பி.குணசேகர் | கொட்டிவாக்கம் |
| 110. | புருஷோத்தமன் | மயிலை |
| 111. | ஆறுமுகம் | அடையார் |
| 112. | நியூ டேக் | அத்திப்பட்டு |
| 113. | கே காசிலிங்கம் | சேத்துப்பட்டு |
| 114. | சம்மந்தம் | நுங்கம்பாக்கம் |
| 115. | விஜயரங்கம் | தேனாம்பேட்டை |
| 116 | ஈஸ்வரி | தேனாம்பேட்டை |
| 117 | கே கௌரி | குமார் மயிலை |
| 118 | கே ராமலிங்கம் | சென்னை |
| 119 | நித்தியானந்தம் | ராஜா அண்ணாமலை புரம் |
| 120 | செல்வம் மணிகண்டன் | ராஜா அண்ணாமலைபுரம் |
| 121 | ராமச்சந்திரன் | லட்சுமிபுரம் |
| 122 | பரமேஸ்வரன் சரஸ்வதி ஏஜென்சி | சிந்தாதிரிப்பேட்டை |
| 123 | சி.குமார், | சென்னை |
| 124 | ராஜி லோகந்திரன் கணேஷ் | அண்ணா நகர் கிழக்கு |
| 125 | சி என் வத்சலா | கோடம்பாக்கம் |
| 126 | வசந்தி (குருகுலம்) | கோடம்பாக்கம் |
| 127 | முனியப்ப செட்டி தெரு | பெரம்பூர் |
| 128 | மாதவன் | ராஜா அண்ணாமலைபுரம் |
| 129. | சாவித்திரி | கண்ணதாசன் நகர் |

| | | |
|---|---|---|
| 1. | சிவா விஷ்ணு ஆலயம் | பெரியார் நகர், |
| 2. | மா முருகன் ஆலயம் | மதுரவாயில் |
| 3. | முத்தம்மன் கோவில் தெரு | அயன்புரம் |
| 4. | ராஜ்குமார் | அயன்புரம் |
| 5. | ஹரிபாபு | அயன்புரம் |
| 6. | அங்காள பரமேஸ்வரி | பெரம்பூர் |
| 7. | பாலதண்டாயுதபாணி | வியாசர்பாடி |
| 8. | வெற்றி விநாயகர் | சாஸ்திரி நகர் |
| 9. | பீலிகான் முனீஸ்வரர் | வியாசர்பாடி |
| 10. | விநாயகர் ஆலயம் | கொடுங்கையூர் |
| 11. | கணேஷ் | |
| 12. | வள்ளலார் அன்னதான சமாஜம் | திருவிக நகர் |
| 13. | வள்ளலார் சபை | திருவிக நகர் மார்க்கெட் |
| 14. | ராயல் அயன் சென்டர் | பெரம்பூர் |
| 15. | சண்முகம் | திருவிக நகர் |
| 16. | வி.எஸ் .டி செல்வராஜ் | திருவிக நகர் |
| 17. | பால் முனீஸ்வரர் | வியாசர்பாடி |
| 18. | வள்ளலார் ஆலயம் | பேசின் பாலம் |
| 19. | காமாட்சி அரிசி கடை | பெரவள்ளூர் |
| 20. | லட்சுமி அம்மன் ஆலயம் | மணலி மாதவரம் |
| 21. | ரமணா நகர் | பெரம்பூர் |
| 22. | மார்க்கெட் ஆலமரம் | ரெட்ஹில்ஸ் |
| 23. | தத்பத அடிகளார் சபை | ரெட்ஹில்ஸ் |
| 24. | பத்மநாபன் | எப் 36 கோயம்பேடு |
| 25. | பாலாஜி | எப் 32 கோயம்பேடு |
| 26. | ரவி ராஜ் | ஜே 114 கோயம்பேடு |
| 27. | மூர்த்தி | கோயம்பேடு |
| 28. | சந்தானம் | ஜி 100 கோயம்பேடு |
| 29. | முரளி | இ113 கோயம்பேடு |
| 30. | தக்காளி கடை | டி 90 கோயம்பேடு |
| 31. | அருள்ஜோதி மளிகை கடை கோதண்டம் | ஜிபி 70 கோயம்பேடு |
| 32. | லெமன் கடை | எ 41 கோயம்பேடு |
| 33. | மூர்த்தி | எம் 109 கோயம்பேடு |
| 34. | தட்சணாமூர்த்தி | எம் 53 கோயம்பேடு |
| 35. | உருளைக்கடை | எம் 53 கோயம்பேடு |
| 36. | ரகு | ஜே 103 கோயம்பேடு |
| 37. | இளங்கோவன் இலை கடை | கோயம்பேடு |
| 38. | பாலமுருகன் | பி104 கோயம்பேடு |
| 39. | தேவா | எஃப் 30 கோயம்பேடு |

# வள்ளலாரின் புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | HOW SOUL BECOMES LIGHT | – ரூ.120 |
| 2. | சத்திய ஞானசபைத்தத்துவ விளக்கம் | – ரூ.80 |
| 3. | THE JOURNEY | – ரூ.50 |
| 4. | திருவருட்பிரகாச வள்ளலார் வாழ்வில் நடந்த அற்புதங்கள் | – ரூ.20 |
| 5. | வள்ளலார் வரலாறு (வினா–விடை) | – ரூ.30 |
| 6. | திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய உபதேசங்கள் | – ரூ.10 |
| 7. | திவ்ய ஒளி | – ரூ.50 |
| 8. | அருட்குறள் | – ரூ.50 |
| 9. | ஐந்தாம் திருமுறை | – ரூ.200 |
| 10. | ஆறாம் திருமுறை | – ரூ.225 |
| 11. | சாகாநிலை சத்திய வாழ்வு | – ரூ.50 |
| 12. | சுத்த சன்மார்க்கம் வினா–விடை | – ரூ.30 |
| 13. | நாளந்தாதி | – ரூ.40 |
| 14. | அகவல் பாராயணத்திரட்டு (சிறியது) | – ரூ.15 |
| 15. | அகவல் பாராயணத்திரட்டு (பெரியது) | – ரூ.30 |
| 16. | உரைநடைப்பகுதி | – ரூ.200 |
| 17. | அருட்பெருஞ்ஜோதி அகவல்விளக்கவுரை | – ரூ.120 |
| 18. | வள்ளலார் பேனா | – ரூ.35 |
| 19. | மகாமந்திரப்பெட்டி | – ரூ.600 |
| 20. | அருட்பெருஞ்ஜோதி திருஅகவல் கையெழுத்து நகல் | – ரூ.250 |

# மூலிகை மருந்துகள்

| | | |
|---|---|---|
| 1. | கூட்டுசூரணம் (50கி) | – ரூ.60 |
| 2. | கரிசாலை (50கி) | – ரூ.60 |
| 3. | திரிபலா (50 கி) | – ரூ.60 |
| 4. | முடவட்டான் கால்சூப் (50 கி) | – ரூ.100 |
| 5. | முச்சுடர் கரிசாலைத்தைலம் 200 (எம்.எல்.) | – ரூ.300 |
| 6. | அகத்தியர் கருவப்பட்டைப்பற்பொடி (80 கி) | – ரூ.45 |
| 7. | கரிசாலைக் கண் மருந்து | – ரூ.70 |
| 8. | மூலிகைத்தைலம் | – ரூ.40 |
| 9. | மூலிகை மிட்டாய் | – ரூ.10 |
| 10. | சுக்குப்பொடி (50 கி) | – ரூ.55 |

# எதிலும் இரட்டிப்பு நன்மை வேண்டும் என்றால் இதை செய்யுங்கள்



*1867*–ல் வைகாசி மாதம் 11–ல் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானாரால் வடலூரில் சத்திய தருமச்சாலை தொடங்கப்பட்டது. அணையா அடுப்பும் முதன் முதலாக ஏற்றப்பட்டது. ஜீவகாருண்ய ஒழுக்கம் முதன்முதலாக அருளப்பட்டது. எனவேதான் வைகாசி 11 சத்திய தருமசாலை விழாவாக கொண்டாடப்படுகின்றது. வீதி பற்றியும், பாவப் புண்ணியங்கள் பற்றியும், பிறவிப்பற்றியும், ஆன்மா பற்றியும் அருள்ஜோதி புத்தகத்தில் வெளியாகும் பல கருத்துக்களும் வள்ளல் பெருமான் அருளிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் சொல்லப்பட்டதே இதனை கடவுளின் பொது வேதம் என்பார் வள்ளலார். இந்த வேதம் எந்த ஜாதி, மத, சமயத்தையும் சார்ந்ததாக இருக்காது. மனிதனாய் பிறந்த அனைவருக்குமான பொதுவான விடயத்தை மட்டும் கூறும் ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறை.

எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையிலும், எல்லோரும் பின்பற்றும் வகையிலும், எல்லோருக்கும் பயன் உண்டாக்கும் வகையிலும் மிக எளிமையாக இருக்கும். இந்த ஒன்றை உணர்ந்து படித்து பழகுபவர்கள் ஒழுக்கத்தில் சிறப்பார்கள். இதனைப் பழகி வெற்றிப் பெற்றவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வையேப் பெறுவார்கள். எனவே ஜீவகாருண்யம் ஒழுக்கம் நூலை வாங்கிப் படித்து வீட்டு அறையில் வைக்கலாம். பலரும் கூட்டாகச் சேர்ந்து ஜீவ காருண்யம் ஒழுக்கம் படிக்கலாம். பல ஜீவகாருண்ய செயல்களைச் செய்து சிறப்பாகக் கொண்டாடலாம். இந்த நூலானது 10 ரூபாயில் இருந்தே விற்கப்படுகின்றது. நாம் ஒழுக்கத்தைப் பெறுவதோடு மற்றவர்களையும் நல் ஒழுக்கத்தைப் பெற துணை செய்வது நமக்கு இரட்டிப்பு நன்மையைக் கொடுக்கின்றது.

நாம் பெரும் எந்த ஒரு நன்மையையும், மற்றவர்களையும் பெற வழி வகுப்பது நமக்கு இரட்டிப்பு நன்மையைத் தரும். அதனால் நமக்குத் தெரிந்த நல்ல விஷயங்களை மற்றவர்களுக்குத் தெரியப் படுத்த எடுக்கும் அனைத்து முயற்சிகளும் நமது நன்மையைப் பல மடங்காக உயர்த்தும். நம் மூலம் ஒருவர் நல்ல விஷயத்தை தெரிந்து கொண்டு அதனைப் பின்பற்றி பயன்பெறும் பொழுது அதற்கான நன்மை நம்மையும் சேரும்.

எனவே நல்ல விஷயங்களை நம்மால் முடிந்த அளவு தற்பொழுது உள்ள காலகட்டத்திற்கு ஏற்ப வெளிப்படுத்த வேண்டும். நல்ல விஷயங்களைப் புத்த

கங்கள், நாளிதழ், சமூக வலைத்தலங்கள், தொலைக்காட்சி, சினிமா போன்ற எல் லாவற்றின் வழியாகவும், வெளிப்படுத் துவதும், வெளிப்படுத்த துணை செய் வதும் நமக்குப்பல மடங்கு நன்மையை உண்டாக்குகின்றது.

பசித்தவர்களுக்கு பசியாற்றுவிப்பது சிறப்பு தான் அதைவிட சிறப்பு பலரையும் பசியாற்ற வைக்கும் முயற்சி. கொல்லாமை, புலால் உண்ணாமையை கடைப்பிடிப்பது சிறப்பு தான். அதைவிட சிறப்பு பலரை யும் கடைப்பிடிக்க வைக்கும் முயற்சி. அதனால்தான் வள்ளல் பெருமான் இப் பொழுது நீங்கள் இதுவரைக்கும் ஒழுக்கத் திற்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனித ராக இருந்தாலும் நீங்களும் ஒழுக்கத்திற்கு வருவதோடு கூட, மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்வித தந்திரமா வது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

நீங்கள் கொஞ்ச தினத்திற்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள். நானும் ஆண்ட வரிடத்தில் இவ்வுலகத்தில் உள்ள எல்லா ஜீவர்களும் நன்மை அடைய பிரார்த் தித்தும் ஆண்டவரிடத்தில் கேட்டுக் கொண்டும் வருகின்றேன். ஆதலால் நீங்கள் அப்படிச் செய்து கொண்டிருங்கள் என்பார் வள்ளல் பெருமான்.

எனவே அவரவர்கள் அவரவர்களுக்கு தெரிந்த நல்ல வழிகளில் நல்ல விஷ யங்களை மக்களுக்குக் கொண்டு சேர்க் கும் நல்ல செயலைத் தொடங்குவோம்.

## பரிசுப்போட்டி

**நம் அருள்ஜோதி சன்மார்க்க மாத இதழில் வெளியாகும் கட்டுரைகளில் இருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான பதில் அளிக்கும் ஒரு வாசகருக்கு அழகிய பரிசு காத்துள்ளது.!**

### இந்த மாதத்திற்கான கேள்வி

**சத்திய தருமச்சாலை விழா என்று கொண்டாடப்படுகிறது?**

**விடைகள் அனுப்ப வேண்டிய கடைசி தேதி: மார்ச்-25**

**சென்ற மாத கேள்விக்கான விடை :**
**பஞ்ச பூதங்கள், நீர், நிலம், காற்று, வானம், நெருப்பு.**

**சென்ற மாத பரிசுப் போட்டிக்கான விடையை சரியாக தெரிவித்த நபர்கள்**

1. ஜேம்ஸ் பாண்ட் -புவனகிரி
2. ரஞ்சினி -சென்னை
3. அசோகன் சென்னை
4. மோகன்தாஸ் -காஞ்சிபுரம்
5. ஆறுமுகம் -திருவண்ணாமலை
6. அருட்செல்வி -புதுக்கோட்டை
7. சங்கீதா -சென்னை
8. லக்ஷ்மி சென்னை
9. செல்வம் விருதுநகர்
10. ஜோதிக்குமார் விழுப்புரம்
11. பர்வத ராஜகுமாரி வேலூர்
12. சிவராஜ் கோவை
13. ஜானகிராமன் சென்னை
14. விஜயகுமாரி சென்னை
15. கவிதா திருவாரூர்

**தங்களின் விடைகளை தெரிவிக்கும் பொழுது பெயருடன், முகவரியையும் சேர்த்து வாட்ஸ் அப் நம்பருக்கு அனுப்பவும்**

**விடைகள் அனுப்ப வேண்டிய : வாட்ஸ்அப் நம்பர் : 9840369827**

சீகாழி. கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாகத்
தொகுத்தவர் ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**55. காலனுக்குப் பாவமென்றுங் காற்றுங் கதிரவனும்**
**சீலமிலார் என்றும் சிவயோகி–மேலொன்றைச்**
**சுட்டுவதுந் தம்மைச் சுழற்றி விடா(து) ஆட்டும் மலக்**
**கட்டின் பிராந்திவலுக் காண்.**

**சிவயோகிக்கு பூசையாதி, நீராடலாதி ஆசாரம் இலர் என்று கூறுவது பொருந்துமா?**

*உயிர்களைக் கொல்லுதலால் காலனுக்குப் (யமன்) பாவம் என்றும்; அசுத்த நிலத்தில் சலித்தலானும், அந்நிலத்து எறிதலானும் காற்றுங் கதிரவனும் ஆசாரம் இலர் என்று கூறுதல் போல், சிவயோகிக்கு நன்மார்க்கங்களைச் செய்திலர் என்றும், நீராடலாதி ஆசாரம் இலர் என்றும், இப்படி குணதோஷங்களை சிவயோகிகள் மேல் சுட்டிக் கூறுவது ஏனெனில்;*

*தம்மைவிடாது பற்றிநின்று அவத்தைகள் தோறும் சுழற்றி ஆட்டப்பட்ட மலபந்தத்தினால் தோற்றும் பிராந்தியினது (மயக்கம்) சாமர்த்தியமாம்.*

*குறிப்பு: சரியை, கிரியை, யோக, ஞானங்களுள் ஞானம் ஒன்றுமே முக்திக்கு ஏதுவாதலின், ஞானத்தைப் பெற்றவர்களுக்கு சரியாதிகளும், உடம்பாதிகளும் கடந்து சுத்தமாயுள்ள ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருத்தலால் மேற்சொன்ன ஆசார வகைகள் சிவயோகிகளுக்கு இல்லை என்பதாம்.*

**56. நாயேறி வீழ்ந்துஎன் நடாத்தூகில் என் ஞானிக்குப்**
**பேயாஞ் சுகம் பழித்தென் பேணுகில்என் – தோயார்**
**பெருமை சிறுமையிலை பின்னு முன்னு மில்லை**
**வரைவற்று வேண்டியசெய் வார்.**

**ஞானிகளுக்கு உலகில் ஏற்படும் இகழ்ச்சியும், புகழ்ச்சியும் ஒன்றெனக் காணும் தன்மை எப்படி வரும்?**

*இகழ்ச்சியாய் உள்ள நாய் ஏறி வீழ்ந்தாலும் நடாத்தினாலும் இகழ்ச்சி புகழ்ச்சி இன்றாயதுபோல்; ஞானிகளுக்கு அது பேய்க் கூத்துபோல் தோன்றும். ஏனெனில் ஞானிகள் தமக்கு இகழ்ச்சியாயிருந்த உடம்பை இகழ்ந்தாலும், புகழ்ந்தாலும் அவை அவர்க்கு இன்றென்பது போல;*

*பெருமையும் சிறுமையும் அவர்க்கில்லை. அவரிடத்தில் பின்னாகிய சகலமும், முன்னாகிய கேவலமும் இல்லை. ஆகலின் சுத்தமாகிய அருள் வடிவாயிருந்து அளவின்றித்தாம் வேண்டியவாறே திருவிளையாட்டு ஆடுவார்.*

*குறிப்பு: செம்பிற் களிம்பு போல, உயிரை அநாதியிற் பற்றியிருந்த சகசமலம் நீக்கற்பொருட்டு மாயையில் தனுவாதி கொடுத்தலின், சகலத்தைப் பின்னென்றும், ஆணவ சம்பந்தமான கேவலத்தை முன்னென்றுங் கூறினார் என்பதாம்.*

# அருள்ஜோதி TV

## TCCL கேபிள் TV Channel No : 125

## நிகழ்ச்சிகளின்
## சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...

அருள்ஜோதி
Aruljothi TV
APP













**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை**
**'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**


**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044-35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

ARULJOTHI SANMARKKA TRUST
INDIAN BANK
A/C.No.:6206014778
IFSC CODE: IDIB000P034
BRANCH : PERAMBUR

Aruljothi TV
+91 73052 63516
8883360800@okbizaxis


**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012

# நீங்களும் அன்னதர்மம் செய்யலாம்

ஒவ்வொரு இல்லறத்தாரும் மாதம் மூன்று கிலோ அரிசியும், அரை கிலோ பருப்பும் கொடுப்பதன் மூலம், மாதம் முப்பது நாளும் தினமும் ஒருவருக்கு அன்னதர்மம் செய்ததன் பலனைப் பெறமுடியும். தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் இத்திட்டத்தில் சேர்வதன் மூலம் சென்னையிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் நாள்தோறும் அன்னதர்மம் நடைபெறச் செய்யலாம். இந்தப் புண்ணிய தொண்டில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் முகவரியை ஆலயத்துக்கு தெரிவித்தவுடன் ஆலயத்தைச் சேர்ந்த சேவாதாரிகள் தாங்கள் செலுத்தும் தருமத்தை நேரில் வந்து பெற்று கொள்வார்கள். மேலும், தங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் போன்ற சிறப்பு நாட்களில் அன்ன ஆலயத்தின் மூலம் தாங்கள் விரும்பும் ஆலயத்தில் அன்னதர்மம் செய்யலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

## அன்ன தர்மத்தின் சிறப்புகள்

1.அன்ன தருமம் செய்வதன் மூலம் இறைவன் அருளைப் பெறலாம்.

2.நம் சந்ததியினருக்குச் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுத்தலே.

3.அனைத்து நோய்களும் நீங்க அருமருந்து அன்னம் கொடுப்பதே ஆகும்.

4.மனக்குறைகள் நீங்கி மகிழ்வுடன் வாழவைப்பது அன்ன தருமமே

5.தொழில் சிறந்து விளங்க அன்னதருமம் செய்வோம்.

6.கடன்கள் நீங்கி மன அமைதி பெற அன்னதர்மம் செய்வோம்.

7.போதும் என்ற மனநிறைவுடன் ஓர் ஆன்மா கூறுமளவுக்கு ஒரு தருமம் உண்டென்றால் அது அன்ன தருமமே. அன்ன தருமம் என்ற திறவுகோலைக் கொண்டுதான் எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவிக்க முடியும். நம் சந்ததியினருக்கு நாம் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுப்பதே.



**இந்தப் புண்ணியத் தொண்டில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

**பசி தீர்ப்பது — பரம புண்ணியம்**


தயவுத்திருமதி. **தனலட்சுமி அம்மையார்,**

எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

**தொலைபேசி:** **044-25570770 9003034056**



Owned, Published: Thavathirumathi. Dhanalakshmi Ammaiyaar, Published from No.:33, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 and Printed by Bharani-Press Editor: Thayavuthirumati. Dhanalakshmi Ammaiyaar